**O.S.No. 104/2015**

**Date: 21.08.2024**

**வா.சா 1 முத்தம்மாள்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது திருமலாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு பூர்வீகமான ஊர் புளியங்குடி சிந்தாமணி ஆகும். எனக்கு முதல் திருமணம் செய்த ஊர் வாடியூர் ஆகும். எனது முதல் கணவர் பெயர் ஆரோக்கியசாமி ஆவார். வாடியூரில் திருமணம் முடிந்து 3 மாத காலம் வாழ்ந்தேன். பின்னர் எனது தகப்பனார் ஊரான சிந்தாமணிக்கு வந்துவிட்டேன். ஆரோக்கியசாமி இறந்து போனார். ஆரோக்கிய சாமி இறந்து 30 வருட காலம் இருக்கும். மேற்படி இறந்து போன எனது முதல் கணவர் ஆரோக்கியசாமிக்கான வாரிசு சான்றிதழ், இறப்பு சான்றிதழ்களை வைத்துள்ளீர்களா என்றால் இல்லை. ஆரோக்கியசாமியின் குடும்பத்தினர்கள் யார் என்றால் சகோதர சகோதரி வாடியூரில் இருக்கிறார்கள். ஆரோக்கியசாமியின் குடும்பத்தினருடன் எந்த ஒரு பிணக்கும் கிடையாது என்றால் சரிதான். மேற்படி குடும்பத்தினர்களை சாட்சியாக விசாரிக்கலாம் என்றால் சரிதான். திருமலாபுரத்தில் எனது தங்கை, தங்கையின் கணவர் உள்ளனர். திருமலாபுரம் கிராமத்தில் இந்துநாடார் உறவின் முறை இருக்கிறது என்றால் சரிதான். இந்து நாடார் உறவின் முறை கமிட்டி, திருமலாபுரத்தில் ஒரு நபருக்கு திருமணம் ஆகியிருந்தால் திருமண விவரங்கள், விவாகரத்து விவரத்திற்கான பதிவுகள் ஊர் பணம் கட்டி பதிவு இருக்கும் என்றால் சரிதான். மேற்படி நடைமுறை இன்றுவரை திருமலாபுரத்தில் நடைமுறையில் இருக்கிறது என்றால் சரிதான். எனக்கு ஆரோக்கியசாமியுடன் திருமணம் ஆகி 2 மகன்கள் உள்ளார்கள். அவர்கள் பெயர் இசக்கிராஜா, பிரபாகரன் ஆகும். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது முதல் மகன் படித்து வெளியூரில் உள்ளார். 2வது மகன் மனவளர்ச்சி குன்றிய நபர் ஆவார். நான் முதன் முதலாக திருமலாபுரத்திற்கு என் தங்கை வீட்டிற்கு வந்தேன். எனது குழந்தைகளுக்கு விடுமுறை விடும் சமயங்களில் நான் திருமலாபுரம் வந்து செல்வேன். நான் திருமலாபுரத்திற்கு 2007–2008 ஆண்டுகளில் நிரந்தமாக குடிவந்தீர்கள் என்றால் திருமணம் ஆன பிறகு திருமலாபுரம் கிராமத்திற்கு வந்தேன். எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் வருடம் தெரியவில்லை 26 வருடங்கள் ஆகிறது. எந்த மாதம் என்று தெரியாது.

திருமண விவரம் ஊரில் யாருக்கும் தெரியாது என்றால் என்னுடைய திருமணம் ஊரில் அனைவருக்கும் தெரியும். உங்களுடைய சமுதாயத்தில் நிச்சயதார்தம் நடைபெறும் என்றால் தனியாக நிச்சயதார்த்தம் நடைபெறவில்லை. பெரியோர்கள் பேசி திருமணம் நடைபெற்றது. 1ம் பிரதிவாதியின் தாயார் பஞ்சவர்ணம் ஆவார். முருகேஸ்வரி பஞ்சவர்ணம் – கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் பிறந்த மகள் என்றால் சரிதான். முருகேஸ்வரியையும், அவரின் தாயாரையும் எனது திருமணத்தின் போது பார்க்கவில்லை என்றால் சரிதான். பஞ்சவர்ணம் என்பவர் கோபாலகிருஷ்ண நாடாருக்கு ஊர் பெரியோர்களால் பேசி திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். திருமண காலத்தில் இருந்து எஸ்டேட்டில் பணிபுரிந்து வருகிறார் என்றால் இல்லை. திருமலாபுரத்தில் தான் இருந்தார். கோபாலகிருஷ்ண நாடாருக்கும் பஞ்சவர்ணத்திற்கும் நீதிமன்றத்தின் மூலம் விவாகரத்து பெற்றதற்கான ஆவணங்களை பார்த்துள்ளீர்களா என்றால் பார்க்கவில்லை. மேற்படி கோபாலகிருஷ்ண நாடாருக்கும் – பஞ்சவர்ணத்திற்கும் என்ன பிணக்கு இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். உங்களுக்கும் கோபாலகிருஷ்ண நாடாருக்கும் யாதொரு காலத்திலும் திருமணம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள குடும்ப அட்டை, ஆதார் நகல் வருமான துறை ஆவணங்களில் உங்களுடைய திருமண சான்று கொடுத்து வாங்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய வாய்மொழி தகவலின் பேரில் பதிவு அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் கூறியும் பதிவு செய்யப்பட்டது. தாவா சொத்துக்களில் நாளது தேதி வரையிலும் நான் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கான அனுபவ ஆவணங்கள் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யமுடியும் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை எதையும் பிரதிவாதிகள் விற்பனை செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் உங்கள் பிராதிலும் தாவா சொத்துக்களை எவருக்கும் விற்பனை செய்யவில்லை நாங்கள் தான் அனுபவம்செய்து வருகிறோம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். கோபாலகிருஷ்ண நாடார் உடன் பிறந்தவர்கள் ராமசாமி, காசி, வைத்தியலிங்கம் சகோதரர்களும் குட்டியம்மாள் என்ற சகோதரி ஆவார்.

மேற்படி குட்டியம்மாளின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ராமசாமி, காசி, வைத்தியலிங்கம் சகோதரர்கள் உயிருடன் தான் உள்ளனர். நீங்கள் தாக்கல் செய்துள்ள குடும்ப அட்டை, ஆதார் நகல், வாக்காளர் அடையாள அட்டை ஆகியவைகளை வைத்து கோபாலகிருஷ்ண நாடாருக்கும் எனக்கும் உள்ள திருமண உறவை உறுதி செய்ய முடியாது என்றால் சரியல்ல. உங்களுடைய கணவர் ஆரோக்கியராஜ் நாளது தேதி வரை உயிருடன் தான் உள்ளார் என்றால் சரியல்ல. உங்களுக்கும் கோபாலகிருஷ்ண நாடாருக்கும் இடையில் யாதொரு திருமணமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இசக்கிராஜா, பிரபாகரன் ஆகியோர் இருவரும் ஆரோக்கியசாமியின் திருமண உறவில் பிறந்தவர்கள் என்றால் சரிதான். தாவாசொத்தை நீங்கள் கூட்டாக அனுபவம் செய்தவற்கு யாதொரு ஆவணமும் கிடையாது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வழக்குதாக்கல செய்வதற்கு முன்பு பிரதிவாதிகள் என்னை நான் குடியிருக்கும் வீட்டில் இருந்து காலி செய்ய சொன்னார்கள் என்றால் சரியல்ல. வழக்கிற்கு முன்னிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் அனுப்பியுள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகள் வீட்டை காலி செய்ய சொல்லி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. திருமலாபுரம் கிராமத்திற்கு 2004ம் ஆண்டு வாடகைக்கு குடியிருக்க வந்தேன் என்றால் சரியல்ல. நீங்கள் குடியிருக்கிற வீட்டிற்கு மாத வாடகை ரூ.200 பேசி வாடகைக்கு விடப்பட்டது என்றால் சரியல்ல. 22.05.2014ல் கோபால் என்ற கோபாலகிருஷ்ண நாடார் இறந்து போனார் என்றால் சரிதான். 2014 ஆகஸ்ட் மாதத்தில் பிரதிவாதிகள் வீட்டை காலி செய்ய சொன்னார்கள் என்றால் என்னை இதுவரை வந்து வீட்டை காலி செய்ய சொல்லவில்லை. 18.11.2014 ல் வழக்கறிஞர் அறிவிப்பு நீங்கள் அனுப்பியுள்ளீர்கள் என்றால் அனுப்பியுள்ளேன். அதன் பின்பு பிரதிவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது என்றால் சரியல்ல. பேச வரவில்லை. அவ்வாறு அறிவிப்பு அனுப்பிய பின்பு பிரதிவாதிகள் என்னிடம் ஏன் அறிவிப்பு அனுப்பினாய் வீட்டை காலி செய் என்று சொன்னதாகவும், அதற்கு நான் தவறான நபர்களின் அறிவுறுத்தலின்பேரில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், கால அவகாசம் வழங்குங்கள் என்று கேட்டதாகவும் சொன்னால் சரியல்ல.

நீங்கள் கேட்டதின் பேரில் 2015 ஆகஸ்ட் வரை பிரதிவாதிகள் ஒரு வருட கால அவகாசம் வீடு காலி செய்ய கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. உங்களுடைய மக்களுக்கும் கோபால் கோபாலகிருஷ்ண நாடாரின் பெயரை தான் தகப்பனாராக ஆவணங்களில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் கோபாலகிருஷ்ண நாடாருக்கும் யாதொரு வாரிசுகளும் கிடையாது என்றால் சரிதான். நீங்கள் குடியிருக்கிற கதவு எண். 13/105 வீடு உரிமையாளர் என்ற நிலையில் தான் குடியிருந்து வருகிறேன். வாடகை தாரர் என்ற நிலையில் குடியிருக்கவில்லை என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். நீங்கள் பிரதிவாதிகளின் உரிமையை மறுப்பதால் நான் மேற்கண்ட க.எண். 13/105 ன் கீழ் வாடகை தாரர் நிலையில் குடியிருப்பதற்கான உரிமையையும் இழந்துவிட்டதாக சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வழக்கு காலத்திற்கு முன்பு நீங்கள் நாளது தேதி வரை வாடகை செலுத்தாமல் இருப்பதால் ஆக்கிரமிப்பாளர் என்ற நிலையில் குடியிருந்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் பிரதிவாதிகளின் குடும்பத்தாரும் யாதொரு வகையிலும் உறவுமுறை இல்லாத 3ம் நபர் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு நீங்கள் வழக்கிற்கு முந்தைய அறிவிப்பு சார்பு செய்யாமல் திருப்பபட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.20 அறிவிப்பை அனுப்பிய பின்பு பிரதிவாதிகளிடம் நான் பேச்சுவார்த்தை செய்து குடியிருப்பை காலி செய்ய கால அவகாசம் கேட்டதால் அவர்கள் பதில் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.19 கோபாலகிருஷ்ண நாடாருக்கான இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். கோபாலகிருஷ்ணநாடார் கதவு எண். 13/1ல் வைத்து இறந்ததாக தான் இறப்பு சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். க.எண் 13/105 என்ற வீடு இருப்பது வடக்கு தெரு என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ஆதார் அட்டையில் உள்ள தகவல்கள் ஆவணங்களின் அடிப்படையில் உறுதி செய்து பதிவிடப்பட்ட தகவல்கள் அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.17 வாக்காளர் அட்டையில் வார்டு எண். 14ல் குடியிருப்பதாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 19.03.2008ல் வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். நீங்கள் வார்டு 13ல் குடியிருப்பு இல்லாத காரணத்தினால் தான் வார்டு 14 ல் உங்களுக்கு அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16 ஆவணத்தின் அசல் என்னிடம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னிடம் உள்ளது. வா.சா.ஆ.16 ல் உள்ள தகவல்களும் என்னால் வாய்மொழியாக சொல்லப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 ஆவணம் வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கு காலத்திற்கு முன்பே பிரதிவாதிகள் அனைவரும்சேர்ந்து பதிவு ஆவணத்தின் மூலம் பாகம் செய்து கொண்டனர் என்றால் பதிவு செய்துள்ளார்கள். அது பொய்யானது. மேற்படி விவரம் எனக்கு தெரியாது.வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னால் பத்திரம் போட்ட விவரம் எனக்கு தெரியாது. 13.10.2014 லேயே வழக்கு சொத்துக்களை பொறுத்து கோபாலகிருஷ்ண நாடாரின் வாரிசுகள் பாகம் செய்து பதிவு செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். அது பொய்யானது. முருகேஸ்வரி தனக்கு கிடைத்த பாகத்தை 3 ம் நபருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அது செல்லாது. கிரைய நபர்கள் குறித்து எனக்கு தெரியாது. கிரைய நபர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் அவர்களை பற்றி தெரியாது. கிரையம் பெற்ற நபர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய கட்சியின் படி நாளது தேதி வரை யாதொரு பாகப்பிரிவினை நடைபெறவில்லை என்றால் சரிதான். நீங்கள் தாவா சொத்தின் அனுபவத்தில் குடும்ப உறுப்பினாராகவும் பிற மூன்றாம் நபர் என்ற நிலையில் கூட்டு அனுபவத்தில் இல்லை என்பதால் இந்த வழக்கை கூட்டு அனுபவத்தில் இருப்பதாக கூறி வழக்கு தாக்கல் செய்தது தவறு என்று சொன்னால் சரியல்ல. கோபாலகிருஷ்ண நாடாருக்கு தனிப்பட்ட சொத்துக்கள் எதுவும் பாகப்பிரிவினைக்கு முன்பு கிடையாது என்று சொன்னால் சரியல்ல. கோபால் என்ற கோபாலகிருஷ்ண நாடார் தான் இறக்கும் வரை கூட்டு குடும்பத்தில் இருந்தால் அவருக்கு தனிப்பட்ட சொத்துக்கள் கிடையாது என்றால் சரியல்ல. கோபாலகிருஷ்ண நாடாருக்கு தனிப்பட்ட சொத்துக்கள் இருப்பதாக பிராதில் கூறியிருப்பது தவறானது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–7 வங்கி புத்தகம் வாடகை தாரர் என்ற நிலையில் குடியிருந்ததால் அந்த விலாசம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் வாடகை தாரர் என்ற நிலையில் குடியிருந்ததை வைத்து ஏற்படுத்திய போலியான ஆவணம் என்றால் சரியல்ல. நான் 100 நாள் ஊரக வேலைவாய்ப்பு திட்டதின் கீழ் பணிக்கு சென்று வருகிறேன்.

வா.சா.ஆ.4ல் ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் வேலைக்கு சென்றதற்கான பதிவுகள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 நான் தாக்கல் செய்தது தான். அந்த ஆவணத்தில் 1ம் பிரதிவாதி செல்வகோமதி என்பவருக்கு கிரையம் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் செல்லாத ஆவணம். வா.சா.ஆ.2 1ம் பிரதிவாதி முத்துசாமி என்பவருக்கு கிரையம் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். அது செல்லாது. வா.சா.ஆ.1 ஆவணம் 1ம் பிரதிவாதி மாரிக்கனி என்பவருக்கு கிரையம் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்த கிரைய தாரர்களின் விவரம் ஆவணங்கள் பார்த்த பிறகு தெரியும் என்றால் சரிதான். நீங்கள் பிரதிவாதிகளுக்கு இடையில் நடந்த பாகப்பிரிவினை ஆவணத்தை செல்லாது என்றும், அதுபோல் 1ம் பிரதிவாதி 3ம் நபர்களுக்கு வா.சா.ஆ–1 முதல் 3 ஆவணத்தை செல்லாது எனக் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை. ஆகையால் இந்த பாகப்பிரிவினை வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றும் கூறுவது சரியல்ல. எதிர்இடை கோரிக்கை தபசில் சொத்தில் வாடகை தாரர் ஆக குடியிருந்தை தனக்கு சாதகமாக்கி ஆவணங்களை உற்பத்தி செய்து கோபாலகிருஷ்ணநாடாரின் மனைவி என்று பொய்யாக பிரஸ்தாபம்செய்து தாவா சொத்தில் இருந்து காலி செய்ய மறுப்பதால் எதிர்இடைகோரிக்கை பரிகாரமாக என்னை தாவா சொத்தில் இருந்து காலி செய்து சுவாதீனத்தை பெறுவதற்கும் 13.10.2014 தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தின் படி பிரதிவாதிகள் சொத்துக்களை அனுபவம் செய்வதை நான் இடையூறு செய்ய கூடாது என தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கும் ஆரோக்கியசாமிக்கும் நடந்த திருமணம் ஊர்ஜிகத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. கோபாலகிருஷ்ணநாடாரின் மனைவி என்ற அந்தாஸ்து இல்லாதால் எனக்கு வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல.